13 பாடம்

# மீண்டும் சேருதல்

***உனது குடும்பத்தினருக்கு உதவி தேவைப்படும்போது, நீ உதவுவது உண்டா? யோசேப்பு தனது குடும்பத்தினருக்கு எத்தனை அன்பாக உதவினார் என்று பார்ப்போம். அதிலும் தன்னை மிகவும் வேதனைப்படுத்தி, பிறரிடம் அடிமையாக விற்றுப்போட்ட தன் அண்ணன்களுக்கும் அவர் உதவ மறக்கவில்லை.***

யோசேப்பு கொடுத்த ஏராளமான பண்டம், பரிசுகளுடன் தங்கள்வீட்டை நோக்கிப் பயணித்தனர். ஏராளமான அரசாங்க வண்டிகளில் தேவையான யாவையும் யோசேப்பு அனுப்பியிருந்தார். பார்வோனும் அவர்கள் குடும்பத்துடன் எகிப்தில் தங்குமாறு அவர்களுக்கு அனுமதி தந்திருந்தார்.


வீடு வந்து சேர்ந்தனர். சோர்வாயிருந்த யாக்கோபுவிடம், யோசேப்பின் காரியங்களையெல்லாம் சொன்னார்கள்; நம்பமுடியாமல் தடுமாறினார். ஆனாலும் யோசேப்பிடம் இருந்து வந்துள்ள வெகுமதிகளும், தானியங்களும், யாக்கோபுவை நம்பவைத்தது. யாக்கோபின் இதயம் ஒரு வினாடி நின்று பின் இயங்கிற்று.

தங்களுடைய பொருட்கள் யாவையும் சேகரித்தனர்; எகிப்துக்குப் புறப்பட்டார்கள். பார்வோன் அனுப்பியிருந்த அரசாங்க வண்டிகள் பயணத்திற்கு மிகவும் வசதியாக இருந்தன.

பயணத்தின்போது யாக்கோபு ஆனந்தக் கண்ணீருடன் தேவனைத் துதித்தவாறே தனது பயணத்தைத் தொடர்ந்தார்.

அவர்கள் யாவரையும் யோசேப்பு மிகுந்த அன்புடன் வரவேற்றார். அப்பாவைக் கட்டிப்பிடித்துக்கொண்டு அழுதார். யோசேப்பும் யாக்கோபுவும் வெகுநேரம் அழுதார்கள்.

பின்னர் தனது சகோதரர்களில் ஐந்து பேரை மட்டும் பார்வோனிடம்



## மனன வசனம்

**யாவருக்கும் விசேஷமாக விசுவாசக் குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம். கலாத்தியர் 6:10.**

அழைத்துச் சென்றார்.

''உங்களுடைய தொழில் என்ன?'' என்று பார்வோன் அவர்களிடம் கேட்டார். ''மேய்ப்பர்கள்'' என்றனர். பார்வோன், அவர்களிடம் மிகவும் பரிவாகப் பேசினான். பின் யோசேப்பிடம், ''உனது சகோதரர்களை கோசேனில் குடியிருக்கும்படி செய். அது நல்ல செழிப்பான இடமல்லவா! அங்கே உன் சகோதரர்கள் தங்கள் ஆடுகளை மேய்க்கலாம்'' என்றான்.

யாக்கோபுவைப் பார்வோனிடம், யோசேப்பு அழைத்துச் சென்றார். பார்வோனை யாக்கோபு ஆசீர்வதித்தார்.



கோசேனில் சந்தோஷமாக வாழுமாறு நல்ல வசதிகளைத் தன் சகோதரர்களுக்கு யோசேப்பு செய்தார்.

140 வயதில் யாக்கோபு இறந்தார். இப்போது, சகோதரர்களின் உள்ளத்திலே சற்று பயம் ஏற்பட்டது. யோசேப்புக்கு விளைவித்த தீமைகள் அவர்களது நினைவில் நின்று அவர்களை மிக வாட்டியது. 'தங்களை யோசேப்பு இனி எப்படி நடத்துவானோ?' எனப் பயந்தார்கள்.

''யோசேப்பு, நீ எங்களை மன்னித்துவிடு; உனக்கு நாங்கள் செய்த தீமையையெல்லாம் மறந்துவிடு; அப்பாவும் தான் இறக்கு முன்னர் இதைத் தான் உன்னிடம் சொல்ல விரும்பினார்'' என்று அவரிடம் தூது அனுப்பியிருந்தனர்.

இதைக்கேட்க யோசேப் புக்குக் கஷ்டமாகஇருந்தது. ''நீங்கள் எனக்குத் தீமை செய்தீர்கள்; தேவனோ எனக்கு அதை நன்மையாக மாற்றினார். உங்களைக் காப்பாற்ற

## செய்தி

**என் குடும்பத்தாரிடம் அக்கறைகொள்ள தேவன் உதவுகிறார்.**

கிருபை செய்தார். நான் ஒரு போதும் உங்களுக்குத் தீங்கு செய்ய மாட்டேன்'' என்றவாறே அவர்களை அணைத்துக் கொண்டார். இந்த அன்புதான் தெய்வீக அன்பு.

என் அன்புக்குழந்தையே! நீயும் உன்னை வேதனைப் படுத்துபவர்எவரிடமும் இத்தகைய அன்பைப் பொழி வாயா? தேவன் நம்மிடம் காட்டும் அன்புக்கு அளவுண்டோ?

***செய்முறை:*** **யோசேப்பு தன் சகோதரர்களுக்கு அநேக வெகுமதிகளைக் கொடுத்தார். அவற்றுள் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன. படங்களைப் பார்த்து, அவைகளின் பெயர்களைக் கோட்டில் எழுது. கீழ்க்காணும் அடைப்புக்குறிக்குள் அந்தப் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மாறிக்கிடக்கும் எழுத்துகளை ஒழுங்காக்கி சரியான பெயர்களை எழுது.**



(தி ள் ப ட ங் ண் க ள்)

____________________



(ஆ ள் டை க )

____________________



(வெ ள் கா ளி க் ள் சு க)

____________________



(க தை க ழு ள்)

____________________